### மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட

# நண்பர் கமலஹாசனின் அரசியல் பயணம் மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் வாழ்த்து!



சென்னை, செப். 22

மக்கள் நீதி மய்யம் கட்சியின் செயற்குழு, பொதுக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் அக்கட்சி யின் தலைவராக கமலஹாசன் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதனையடுத்து முதல்வர், தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவராக நண்பர் கமலஹாசன் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவரது அரசியல் பயணம் மென் மேலும் சிறக்க வாழ்த்துவதாகக் குறிப்பிட் டார்.

கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.09.2024) வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**“பகுத்தறிவுச் சிந்தனையும், சமத்துவ நோக்கமும் கொண்டு பணியாற்றிவரும் அருமை நண்பர் கமலஹாசன் அவர்கள் மீண்டும் மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கும் அவரது அரசியல் பயணம் மென்மேலும் சிறக்கவும் என்னுடைய வாழ்த்துகள்!”**

இவ்வாறு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



வேலூர் மாவட்டம் காட்பாடி வட்டம் குகையநல்லூர் கிராமத்தில் பொன்னை ஆற்றின் குறுக்கே ரூ.12.70 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணைக்கான கல்வெட்டினை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா.சுப்புலட்சுமி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில்குமார், ஒன்றியகுழு தலைவர் வேல்முருகன், மண்டல குழு தலைவர் புஷ்பலதா, ஒன்றிய குழு துணை தலைவர் எஸ்.சரவணன், ஊராட்சிகுழு உறுப்பினர் சுலோச்சனா கிருபாகரன், ஒன்றிய குழு உறுப்பினர் டெல்லிராணி, குகையநல்லூர் ஊராட்சி மன்ற தலைவர்லலிதா கோதண்டம், கண்காணிப்பு பொறியாளர் மேல் பாலாறு ஆர்.ரமேஷ், செயற் பொறியாளர் மேல்பாலாறு பிரபாகரன் இன்ஜினீயர் கோபி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### டெல்லி மாநகராட்சி நிலைக்குழுத் தேர்தல்

# கவுன்சிலர்களை இழுக்க பா.ஜ.க. ரூ.2 கோடி பேரம்!

## பா.ஜ.க. மீது ‘ஆம் ஆத்மி’ கட்சி குற்றச்சாட்டு

டெல்லி, செப். 22 -

டெல்லி மாநகராட்சி நிலைக்குழு தேர்தலில் வெற்றி பெறுவதற்காக தனது கவுன்சிலர்களிடம் பா.ஜ.க. குதிரை பேரம் நடத்துவதாக ஆம் ஆத்மி கட்சி குற்றம்சாட்டி உள்ளது.

டெல்லி மாநகராட்சியில் காலியாக உள்ள ஒரு நிலைக்குழு உறுப்பினர் பதவிக்கான தேர்தல் வரும் 26ம் தேதி நடைபெறுகிறது. இதற்கான வேட்புமனு தாக்கல் நேற்று முன்தினம் முடிந்தது. இதில், ஆம் ஆத்மி சார்பில் நிர்மலா குமாரியும், பா.ஜ.க. சார்பில் சுந்தர் சிங்கும் போட்டியிடுகின்றனர்.

இந்நிலையில், செய்தியாளர்களிடம் பேசிய ஆம் ஆத்மி எம்.எல்ஏ.வும், டெல்லி மாநகராட்சியின் ஆம் ஆத்மி பொறுப்பாளரு மான துர்கேஷ் பதக், நிலைக்குழு தேர்தலில் வெற்றி பெறுவதற்காக தங்கள் கட்சியைச் சேர்ந்த கவுன்சிலர்களுக்கு 50 லட்சம் முதல் 2 கோடி ரூபாய் வரை பணம் கொடுப்பதாக பா.ஜ.க. தற்போது வலை வீசுவதாக குற்றம்சாட்டினார். ஆம் ஆத்மி கவுன்சிலர்கள் பா.ஜ.க.வில் சேரவில்லை என்றால், விசாரணை அமைப்புகள் மூலம் துன்புறுத்துவோம் என்று மிரட்டுவதாகவும் அவர் கூறினார். பவானாவைச் சேர்ந்த ஆம் ஆத்மி கவுன்சிலர் ராம் சந்தரை இதுபோல் மிரட்டி தான், பா.ஜ.க. அவரை வலுக்கட்டாயமாக தனது கட்சியில் சேர்த்தது என்றும், இரண்டு நாட்களுக்குப் பிறகு அவர் மீண்டும் ஆம் ஆத்மிக்கு திரும்பியபோது, பா.ஜ.க.வினர் அவரை அவரது வீட்டில் இருந்து கடத்திச் சென்றதாகவும் துர்கேஷ் பதக் தெரிவித்தார்.

### உயர்நீதிமன்றங்களுக்கு

# தலைமை நீதிபதிகளை நியமிப்பதில் தாமதம் ஏன்?

## ஒன்றிய அரசுக்கு - உச்ச நீதிமன்றம் கேள்வி!

புதுடெல்லி, செப்.22-

ஜார்க்கண்ட் உயர்நீதி மன்றத்துக்கு தலைமை நீதிபதியை நியமனம் செய்யாமல் ஒன்றிய அரசு இழுத்தடிப்பு செய்து வருவதாக கூறி அம்மாநில அரசு உச்ச நீதிமன்றத்தில் ரிட் மனு மற்றும் நீதிமன்ற அவமதிப்பு வழக்கை தாக்கல் செய்திருந்தது.

இந்த வழக்கு உச்ச நீதி மன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் அமர்வில் நேற்று முன்தினம்மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது ஒன்றிய அரசு தரப்பில் ஆஜரான அட்டர்னி ஜெனரல் வெங்கட்ரமணி, இவ்விவகாரத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், இந்த வழக்கை ஒரு வாரத்துக்கு ஒத்தி வைக்க வேண்டும் எனவும் கோரினார்.

அப்போது ஜார்க்கண்ட் அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் கபில் சிபல், உயர்நீதிமன்றத்துக்கு தலைமை நீதிபதி நியமனம் செய்யாமல் இருப்பது அரசியல் சாசனத்துக்கு எதிரானது என்றும், இது போன்ற செயல்பாடுகளால் வழக்குகளும் நிலுவையில் உள்ளதால், விசாரணையை ஒத்தி வைக்காமல், நடத்தி உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

இதனைத் தொடர்ந்து, உச்ச நீதிமன்ற கொலீஜியம் பரிந்துரைத்த நீதிபதிகளை நியமனம் செய்வதில் ஒன்றிய அரசு தாமதம் செய்ய காரணம் என்ன? எத்தனை நீதிபதிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

நியமனம் செய்யப்படாமல் இருப்பவர்களுக்கான காரணங்கள் என்ன? என்று சரமாரி கேள்வியெழுப்பிய நீதிபதிகள், இந்த விவகாரத்தில் ஒரு வாரத்தில் விரிவான அறிக்கையை ஒன்றிய அரசு தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டு, விசாரணையை ஒரு வாரத்துக்கு ஒத்தி வைத்தனர்.

### உச்சநீதிமன்றத் தீர்ப்புகள் ஏ.ஐ. தொழில்நுட்ப வசதிகளுடன்

# மொழி பெயர்க்கப்படுவதில் தமிழ் முன்னிலை வகிக்கிறது!

## தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தகவல்!

புதுடெல்லி, செப்.22-

உச்சநீதிமன்ற தீர்ப்புகள் ஏ.ஐ. தொழில்நுட்ப வசதிகளுடன் மொழி பெயர்க்கப்படும் நிலையில், அதில் தமிழ் முன்னிலை வகிப்பதாக தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தெரிவித்துள்ளார்.

வழக்கு ஒன்றின் விசாரணையின் போது கருத்து தெரிவித்த உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, முதன்முதலாக உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்புகள், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உதவியுடன் பிராந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்படுவதாக கூறினார்.

தீர்ப்புகளில் சுமார் 37 ஆயிரம் தீர்ப்புகள் ஆங்கிலத்தில் இருந்து இந்தியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர், பிற மாநில மொழிகளில் மொழிபெயர்க்கும் பணி நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

குறிப்பாக தமிழில் மொழிப் பெயர்க்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருவதாக கூறினார். இஎஸ்சிஆர் எனப்படும் உச்ச நீதிமன்றத்தின் டிஜிட்டல் பதிப்பு மக்களுக்கும், வழக்கறிஞர்களுக்கும், நீதித்துறை யில் பணியாற்றுபவர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தெரிவித்தார்.


